

# சக்தி பைனான்ஸ் லிமிடெட்

*2018-ம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதியுடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான செயல்முறை பலன்கள் குறித்து நிறுவனத்தின் தலைவர்,* **டாக்டர் ம. மாணிக்கம்** *அவர்கள் ஆற்றிய உரை*

அன்பார்ந்த பங்குதாரர்களே,

நமது நிறுவனத்தின் 61ம் ஆண்டு பொதுப் பேரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்திருக்கும் உங்கள் அனைவரையும் வரவேற்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். சென்ற 31 மார்ச் 2018ம் தேதியுடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளும், இயக்குநர்கள் குழுவின் அறிக்கையும் ஏற்கனவே அனுப்பப்பட்டு தற்போது உங்களிடம் இருப்பதால், உங்கள் அனுமதியுடன் அவற்றை வாசிக்கப்பட்டதாக எடுத்துக்கொள்கிறேன்.

**இந்திய பொருளாதாரம்**

இந்திய பொருளாதார நிலைமை அனைத்து துறைகளின் உதவியின் பின்னணியில் மீண்டும் நல்ல நிலைக்கு வருவதற்கான அறிகுறிகள் காணப்படுகிறது. தற்போது இந்திய நாட்டின் பொருளாதார நிலை பெரியளவில் உயர்ந்து உலகளவில் பிரான்ஸ் நாட்டை கடந்து ஆறாவது இடத்தை பிடித்துள்ளது.

அரசாங்க கட்டமைப்பு சீர்த்திருத்தங்களை செயல்படுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட மாறுதல்களின் போது ஏற்பட்ட இடையூறுகளினால், இந்திய பொருளாதாரத்திற்கு 2017-18ம் ஆண்டானது சவாலான வருடமாக இருந்தது. இருப்பினும், இந்திய பொருளாதார வளர்ச்சி (GDP) 6.6 சதவிகிதத்திற்கு உயர்ந்துள்ளது.

சரக்கு மற்றும் சேவை வரி சட்டம் அமலாக்கத்தின் மூலம், மேம்பட்ட அணுகும் வழிகளுக்கு வசதி செய்து இந்திய வணிக சூழலை மாற்றி அமைத்துள்ளது. மத்திய அரசு, கட்டமைப்பு துறையில் முதலீடு செய்வதிலும், வேலை வாய்ப்பு அதிகரிப்பதிலும் புதிய உத்வேகத்துடன் செயல்படுகிறது. இது, நாட்டின் வளர்ச்சிக்கும், தொழில் துறை வளர்ச்சிக்கும், அதிக வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய புள்ளியியல் அலுவலகம் வெளியிட்டுள்ள தகவல்களின்படி, இந்திய பொருளாதாரம், எல்லா எதிர்பார்ப்புகளையும் கடந்து ஏப்ரல்-ஜூன் 2018 வரையிலான மூன்று மாதங்களில் 8.2 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. இது கடந்த முந்தைய மூன்று மாதங்களில் இருந்த 7.7 சதவிகிதத்தை விடவும் மற்றும் கடந்த ஆண்டு இதே மூன்று மாதங்களின் 5.6 சதவிகிதத்தை விடவும் அதிகமாக உயர்ந்துள்ளது. இது, கடந்த 2016-ம் ஆண்டு ஜனவரி-மார்ச் வரை பெற்ற 9.3 சதவிகித

*வளர்ச்சிக்கு பிறகு ஏற்பட்டுள்ள அதிவேக வளர்ச்சியாகவும் மற்றும் சீனா கடந்த ஆண்டு பதிவு செய்த இந்த காலாண்டின் 6.7 சதவிகித்தை விட மிகவும் வேகமான வளர்ச்சியாகவும் உள்ளது. இதனால் இந்தியா உலகில் வேகமாக வளரும் பொருளாதார நாடு என்னும் அந்தஸ்தை பராமரித்து, ஐந்தாவது பொருளாதார நாடாக விளங்கும் ஐக்கிய நாடுகளை முந்தும் வகையில் வளர்ந்து வருகிறது.*

**தொழில் துறை**

*தொழில் துறை உற்பத்தி குறியீட்டு எண் 2018ன் கடந்த ஐந்து மாதங்களின் உச்சமாக ஜுன் 2018ல் 7 சதவிகிதத்திற்கு உயர்ந்துள்ளது. இந்த ஜுன் 2018-ன் வளர்ச்சி எதிர்பார்த்ததை விட அதிகமானதாகவும், மே மாதத்தில் பதிவு செய்த 3.9 சதவிகிதத்தின் அளவில் கிட்டத்தட்ட இரண்டு மடங்கு அளவிற்கு உயர்ந்தும் உள்ளது.*

*சில்லறை விலை வீக்கத்தை ஒத்து உணவுப் பொருள்களின் விலை வீக்கத்தில் ஏற்பட்ட ஆழ்ந்த சரிவை தொடர்ந்து ஜுலை 2018-ல் மொத்த விற்பனை விலை வீக்கம்* (WPI) *தளர்ந்து காணப்பட்டது. மொத்த விற்பனை விலை வீக்கம் கடந்த நான்கரையாண்டுகளின் உச்சத்திலிருந்த 5.77 சதவிகிதத்திலிருந்து 5.09 சதவிகிதமாக ஜுன் 2018ல் குறைந்து காணப்பட்டது. சில்லறை விலை வீக்கமானது, முந்தைய ஐந்து மாதங்களில் ஜுன் 2018ல் உயர்ந்திருந்த 4.92 சதவிகிதத்திலிருந்து, ஜுலை 2018ல் 4.17 சதவிகிதமாக குறைந்துள்ளது.*

**விவசாயத்துறை**

*வேளாண் அமைச்சகம் வெளியிட்டுள்ள நான்காவது முன்கூட்டிய மதிப்பீடுகளின்படி தற்போதுள்ள இயல்பான பருவ நிலையின் காரணமாக உணவு தானியங்களின் உற்பத்தியானது 2018-19ல் எக்காலத்திலும் மிக அதிக அளவான 284.83 மில்லியன் டன்களைத் எட்டும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இது முந்தைய ஆண்டின் உற்பத்தியை விட 3.5 சதவிகிதம் அதிகமாகும். நெல் உற்பத்தி 112.91 மில்லியன் டன்களை எட்டி முந்தைய ஆண்டை விட 3 சதவிகித அளவிற்கு உயரும் என்றும், மற்றும் பருப்பு வகைகளின் உற்பத்தி 25 மில்லியன் டன்களை கடக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.*

**வாகனத் தொழில்துறை**

*நம்மைப் போன்ற வங்கிகளல்லாத நிதி நிறுவனங்கள், சரக்கு வாகனங்களின் பிரிவுடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ளது. நமது நிறுவனத்தின் செயல்பாடுகள் மற்றும் வளர்ச்சியானது, சரக்கு வாகனத் துறையின் செயல்பாடு மற்றும் வளர்ச்சியைப் பொறுத்தே அமைந்துள்ளது.*

*2017-18ல் சரக்கு வாகனத் துறையின் வளர்ச்சி நேர்மறைக் குறியீட்டில் முடிந்துள்ளது. மொத்த சரக்கு வாகனத் துறையின் விற்பனை வளர்ச்சி, கடந்த ஆண்டின் வளர்ச்சியைக் கடந்து 19.94 சதவிகிதத்தை எட்டியுள்ளது. முந்தைய ஆண்டு மார்ச்-ஜுன் விற்பனையை ஒப்பிடுகையில், நடுத்தர மற்றும் கன ரக*

*வாகனங்கள், இலகு ரக வாகனங்கள் ஆகியவற்றின் விற்பனை வளர்ச்சி முறையே, 12.48 சதவிகிதம் மற்றும் 25.42 சதவிகிதம் என்ற அளவில் 2017-18ல் உயர்ந்து காணப்பட்டுள்ளது.*

*2016-17ம் ஆண்டின் 3 சதவிகித வளர்ச்சியை ஒப்பிடும் பொழுது, 2017-18ம் ஆண்டில், சரக்கு வாகனங்களின் உற்பத்தி 10.40 சதவிகித வளர்ச்சியாக உயர்ந்துள்ளது. இதே போன்று, நடுத்தர மற்றும் கன ரக வாகனங்களின் உற்பத்தி கடந்த ஆண்டின் 3.43 இலட்சம் எண்ணிக்கைகளுக்கு மாறாக, 3.44 இலட்சம் எண்ணிக்கைகளாக அதிகரித்து, 0.35 சதவிகித வளர்ச்சியை பதிவு செய்தது. இலகு ரக சரக்கு வாகனங்களின் உற்பத்தி 4.67 இலட்சம் எண்ணிக்கைகளிலிருந்து, 5.51 இலட்சம் எண்ணிக்கைகளாக அதிகரித்து, 17.78 சதவிகித வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.*

*ஏப்ரல்-ஜூலை 2018ல் நடுத்தர மற்றும் கன ரக வாகனங்களின் விற்பனையானது, 64.73 சதவிகித வளர்ச்சியையும், இலகு ரக வாகனங்களின் விற்பனை வளர்ச்சி 35.57 சதவிகிதத்தையும் பதிவு செய்ததன் மூலம், ஒட்டு மொத்த சரக்கு வாகனங்களின் விற்பனையானது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தை காட்டிலும் 45.42 சதவிகிதமாக அதிகரித்துள்ளது.*

**நமது நிறுவனத்தின் செயல்பாடுகள்**

*நமது நிறுவன செயல்பாட்டின் முடிவுகள் தொடர்ந்து முன்னேறி வருகின்றது என்பதை உங்களுக்கு நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற நிதியாண்டில் ₹ 53,791 லட்சங்களாக இருந்த தவணைக் கொள்முதல் பட்டுவாடா 2017-18ல் ₹* **54,964** *லட்சங்களாக உயர்ந்துள்ளது. மொத்த வருமானம், கடந்த ஆண்டின் ₹ 17,055 லட்சங்களிலிருந்து சற்றே குறைந்து, ₹* **16,856** *லட்சங்களாக உள்ளது. தவணைக் கொள்முதல் வருமானமும் முந்தைய ஆண்டின் ₹ 15,796 லட்சங்களிலிருந்து ₹* **15,708** *லட்சங்களாக குறைந்துள்ளது. 2017-18ம் ஆண்டில் தேய்மான ஒதுக்கீட்டிற்கு முந்தைய லாபம் சென்ற ஆண்டின் ₹ 2,433 லட்சங்களிலிருந்து ₹* **2,186** *லட்சங்களாக குறைந்துள்ளது. நடப்பு நிதியாண்டில், தேய்மானம் மற்றும் நிதிக்குவை மற்றும் இதர கழிவுகளுக்கு பிந்தைய மற்றும் வருமான வரிக்கு முந்தைய லாபம், சென்ற ஆண்டின் ₹ 2,112 லட்சங்களிலிருந்து, ₹* **1,854** *லட்சங்களாக குறைந்துள்ளது. கடந்த ஆண்டின் ₹ 1,676 லட்சங்களாக இருந்த வரிக்குப் பிந்தைய லாபம், அதிகரித்துள்ள வருமான வரியின் பொருட்டு, ₹* **1,193** *லட்சங்களாக குறைந்துள்ளது. முன்னுரிமைப் பங்குகளின் மீது இடைக்கால ஈவுத் தொகை 10 சதவிகிதம் மற்றும் குறிப்பிட்ட கால ஈவுத் தொகை 9 சதவிகிதம் வழங்கியதற்கு பின்பும், சாதாரணப் பங்குகளின் ஈவுத் தொகை 10 சதவிகிதமாக இந்த ஆண்டும் பராமரிக்கப்படுகின்றது. லாப நஷ்ட அறிக்கையில் தொடக்கத்தில் உள்ள உபரித் தொகையான ₹ 1,087 லட்சங்களுக்கு மாறாக, இருப்புத் தொகை கம்பெனிகள் சட்டம் 2013-ன் படி, பொது உபரித் தொகையிலிருந்து ₹* **1,000** *லட்சங்கள் பெறப்பட்ட பின்பு, ₹* **1,017** *லட்சங்களாக குறைந்துள்ளது,*

## 2018-19ம் ஆண்டிற்கான வாய்ப்புகள்

அனைத்து துறைகளின் வளர்ச்சியினால் சரக்கு வாகனத்துறையின் வளர்ச்சி தொடர்ந்து நேர்மறையாக உள்ளது. இந்திய மோட்டார் வாகன உற்பத்தியாளர்கள் சங்கம் (SIAM), 2018-19ல் ஒட்டு மொத்த சரக்கு வாகனங்களின் உற்பத்தி அதிகரித்து, விற்பனையானது 10-12 சதவிகித வளர்ச்சி பெறும் என்று எதிர் நோக்குகிறது.

வாகனங்களின் அதிகமான வளர்ச்சியினாலும் மற்றும் மத்திய அரசு கட்டமைப்பு துறையில் ஆழ்ந்த கவனம் செலுத்துவதாலும் மற்றும் சுரங்க துறை மீண்டு வருவதாலும், கன ரக, நடுத்தர மற்றும் இலகு ரக சரக்கு வாகனங்களின் வளர்ச்சி நன்றாக இருக்கும். நமது நிறுவனம் பயன்படுத்தப்பட்ட சரக்கு வாகன பிரிவில் அதிக கவனம் செலுத்தி வருகிறது. விவசாயத்துறை, ஊரக தேவை, மத்திய அரசின் அதிக செலவீடுகள் மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி துறையின் வெற்றிகரமான அமலாக்கம் நாடு நெடுகிலும் அதிகரித்த சரக்கு பரிமாற்றம் ஆகியவைகளினால், சரக்கு வாகனத்துறை நல்ல வளர்ச்சியைப் பெறவுள்ளது. இவ்வளர்ச்சி முடிவாக நம்மைப் போன்ற இவ்வாகனத்துறைக்கு நிதி அளித்து வரும் வங்கி சாரா நிதி நிறுவனங்களின் செயல்பாட்டை மேலும் வளர்ச்சியடைய வாய்ப்பாக அமையும்.

2018 மற்றும் 2019ல் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி (GDP) 7.5 சதவிகிதமாக இருக்குமென்று சர்வதேச தர நிர்ணய முகமை, மூடிஸ் (Moody's), கணித்துள்ளது.

இவ்வளர்ச்சி, நகரங்கள் மற்றும் கிராமங்களின் அதிகமான தேவைகளினாலும் மற்றும் தொழில்துறையின் மேம்பட்ட வளர்ச்சியினாலும் அதிகரிக்கப் பெறும். இயல்பான பருவ மழை மற்றும் அபரிமிதமான உணவுப்பொருள் உற்பத்தி அதிகரிப்பாலும், இந்திய பொருளாதார வளர்ச்சி மேலும் மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றில் சரக்கு வாகனத் துறை மிக அதிக அளவில் பயன் பெற்று, நம்மைப் போன்ற நிதி நிறுவனங்களின் செயல்பாட்டை நல்ல நிலையில் இருக்க ஏதுவாக அமையும்.

## நன்றி பாராட்டுதல்

வைப்பு நிதி அளித்து உதவி வருபவர்களுக்கும், பங்குதாரர்களுக்கும், கடன் பத்திரதாரர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும், நிதி உதவி அளித்து வரும் வங்கி மற்றும் இதர நிதி நிறுவனங்களுக்கும், தர மதிப்பீடு செய்து வரும் நிறுவனத்திற்கும் மற்றும் நமது நிறுவனத்தின் அனைத்து அலுவலர்களுக்கும், இயக்குநர்கள் சார்பாக எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்னை சக்திதேவி நமக்கு தொடர்ந்து நல்வழிகாட்டி நமது எல்லா முயற்சிகளும் வெற்றி பெற அருள் மழை பொழிய வேண்டுகிறேன்.

நன்றி, வணக்கம்.

24 செப்டம்பர் 2018<br>கோயம்புத்தூர்

டாக்டர் ம. மாணிக்கம்<br>தலைவர்



SAKTHI FINANCE

AN EDIFICE BUILT ON TRUST

Statement of Chairman, **Dr. M. MANICKAM**
on the Company's performance for
the year ended 31st March 2018

Dear Shareholders,

It gives me great pleasure to welcome you all to the 61st Annual General Meeting of the Shareholders of the Company. The Board's Report and the Audited Financial Statements of the Company for the year ended 31st March 2018 have been with you for some time and with your permission, I shall take them as read.

**Indian Economy**

Indian Economy has shown signs of recovery on the back of strong support from all sectors. India has become the sixth largest economy in the world, overtaking France.

The year 2017-18 has been a challenging year for India's economy with some transitionary disruption during the implementation of structural reforms of the government. The Gross Domestic Product (GDP) grew to 6.6 per cent.

The implementation of Goods and Services Tax Act (GST) has transformed India's business environment by facilitating increased accessibility. There is also a renewed emphasis by the Government on investment in infrastructure and employment generation. This has opened up more opportunities for business growth and contribution towards national progress.

As per the data released by Central Statistical Office (CSO), the Indian economy, exceeding all expectations, grew 8.2 per cent in April-June 2018, the first quarter of the country's fiscal year, which is higher than previous quarter 7.7 per cent and 5.6 per cent in the first quarter of 2017-18. This is the fastest growth since 9.3 per cent in the January - March period of 2016 and well above 6.7 per cent growth recorded by China for the same quarter. India, thus, maintaining its status as the world's fastest growing economy, is on track to overtake the United Kingdom to become the fifth biggest economy.

## Industrial Sector

The Index for Industrial Production (IIP) for June 2018 rose to a five months' high of 7 per cent in June 2018. The June 2018 growth rate is higher than expected and nearly double that of May 2018 data which was at 3.9 per cent.

Wholesale Price Inflation (WPI) eased in July 2018 following a steep decline in food inflation, in line with the trend seen in retail inflation. The WPI touched 5.09 per cent from a four and half year high of 5.77 per cent in June 2018. The retail inflation declined to 4.17 per cent in July 2018 from the five months' high of 4.92 per cent in June 2018.

## Agricultural Sector

With near normal monsoon, output of most food grains is projected to touch a record level in 2018-19, to give an all-time high food grain harvest of 284.83 million tonnes, 3.5 per cent higher than that of the previous year, as per the Fourth Advance Estimates released by Agricultural Ministry. Rice production is expected to touch a peak of 112.91 million tonnes, 3 per cent more than last year. Pulses production, on the other hand is seen crossing 25 million tonnes.

## Automobile Industry

The Commercial Vehicle (CV) segment has a direct relationship with NBFC's, like our Company. Our Company's operations and performance are linked to the prospects of CV Industry.

In 2017-18, CV Industry ended on a positive note. The overall CV sales grew by 19.94 per cent as against the same period last year. Medium and Heavy Commercial Vehicles (M&HCVs) grew by 12.48 per cent and Light Commercial Vehicles (LCVs) grew by 25.42 per cent in April - March 2018 over the same period last year.

The CV production showed a growth of 10.40 per cent in 2017-18 as compared to a growth of 3 per cent in 2016-17. For the year 2017-18, the production of M&HCVs was at 3.44 lakhs units as against 3.43 lakhs units in previous year, registering a growth of 0.35 per cent. The production of LCVs increased to 5.51 lakhs units as against 4.67 lakhs units, recording a growth of 17.78 per cent.

The overall CV sales registered a growth of 45.42 per cent in April-July 2018 as compared to the same period last year. M&HCVs increased by 64.73 per cent and LCVs grew by 35.57 per cent in April-July 2018 over the corresponding period last year.

## Financial Performance of the Company

I am pleased to inform you that the financial performance of your Company continue to improve. During the financial year 2017-18, the hire purchase disbursements have increased to ₹ **54,964 lakhs** as against ₹ 53,791 lakhs in the previous year. The total income has slightly come down to ₹ **16,856 lakhs** as against ₹ 17,055 lakhs in the previous year. The income from Hire Purchase operations has also declined to ₹ **15,708 lakhs** as against ₹ 15,796 lakhs in the previous year. The profit before depreciation stands at ₹ **2,186 lakhs** as against ₹ 2,433 lakhs of previous year. In 2017-18, after providing depreciation, amortization and other provisions, the profit before tax has declined to ₹ **1,854 lakhs** as against ₹ 2,112 lakhs in 2016-17. The profit after tax has also gone down to ₹ **1,193 lakhs** as against ₹ 1,676 lakhs in 2016-17 due to increased incidence of income tax. After paying an interim and *pro rata* dividend on preference shares, the dividend on equity capital has been maintained at 10 per cent. As against the opening surplus in the statement of profit and loss of ₹ 1,087 lakhs, the balance carried forward has been reduced to ₹ **1,017 lakhs** after drawing ₹ 1,000 lakhs from General Reserve.

## Prospects for 2017-18

The CV industry continues to be positive with growth in all segments. The Society of Indian Automobile Manufacturers (SIAM) expects the commercial vehicle sales to continue to grow at 10-12 per cent in 2018-19.

With increased vehicle growth and the government's continued emphasis on infrastructure and recovery in the mining sector, the growth prospects in M&HCVs and LCVs look good. Your company has been concentrating on pre-owned Commercial Vehicles of the above segment only. With the growth in agriculture and rural demand, higher government spending, faster movement of goods across the country pursuant to successful implementation of Goods and Services Tax Act, the CV industry is set for better prospects. This will eventually increase the growth prospects of NBFCs, like ours, which are funding this sector.

The International Rating Agency, Moody's, expects that the Indian economy to grow around 7.5 per cent in 2018 and 2019. The growth is supported by strong urban and rural demand and improved industrial activity.

With the normal monsoon and expected record output of food grains, the economy is likely to improve. With these measures, the CV Industry will largely benefit, which in turn will facilitate business of NBFCs like ours, which are providing funds to this sector.

**Acknowledgements**

On behalf of the Board of Directors, I wish to convey my sincere thanks to the depositors, shareholders, debentureholders, customers, bankers, financial institutions, credit rating agencies and employees of the Company.

I pray the Goddess **SAKTHI** to continue shower Her blessings and guide us in all our endeavours.

24th September 2018
Coimbatore

**M Manickam**
Chairman

Note: This does not purport to be a report of the proceedings of the 61st Annual General Meeting of the Company.